ரூ. 6.25இலிருந்து 1982இல் ரூ. 6.56 இற்கு 1981இன் 33 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 5 சதவீதத்தினுல் மட்டுமே அதிகரித்தது. கடல்மீன், செத்தல் மிளகாய், நறுமணப்பொருட்கள், ஆகியவற்றிற்கு மட்டுமே விலை அதிகரிப்புக்கள் 1982இல் உயர்வாக விளங்கின. தேங்காயின் சராசரி சில்லறை விலைகளின் 10 சதவீத வீழ்ச்சியே குறிப்பிடத்தக்க விதிவிலக்காகும். இவ்வீழ்ச்சி ஓரளவிற்கு தெங்குப் பொருட்களுக்கான குறைவான பன்னுட்டு விலைகளின் காரணமாகும்.

தாழ்நில, உயர்நில காய்கறி விலைகள் இரண்டும் அதிகரித்த வேளையில் பின்னையது முன்னையதைவிட அதிகளவில் அதிகரித்தது. விலைகளில் அதியுயர் அதிகரிப்பு கடல்மீனிலும் இறைச்சி வகைகளிலும் காணப்பட்டது. 1982இல் கடல்மீன் உற்பத்தி கணிசமானளவு அதிகரித்த போதும் ஈடுசெய்ய முடியாத கேள்வி அதிகரிப்பினுல் விலைகள் 23 சதவீதமளவில் உயர்ந்தன. கடல்மீனின் சராசரி சில்லறைவிலை 1981இன் கிலோக்கிருமிற்கான ரூ. 18.44 உடன் ஒப்பிடுகையில் ரூ. 22.73ஆக மிக உயர்ந்தமட்டத்தை பதிவு செய்தது, இறைச்சி (மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றி, கோழி) 1982இல் ரூ. 26.54ஆக விளங்கி 16 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியது.

1981இல் மிளகாய் விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கிற்கு மாறுன போக்கொன்று காணப்பட்டது. செத்தல் மிளகாயின் சராசரி சில்லறை விலைகள் 1982இல் 7 5 சதவீதத்தால் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 30.00க்கு அதிகரித்தன. நறுமணப் பொருட்களின் சில்லறைவிலைகள் கணிசமானளவால் அதிகரித்தன. 1982இல் நறுமணப் பொருட்களின் சராசரிச் சில்லறைவிலை முக்கியமாக உயர்ந்த ஏற்றுமதி விலைகளின் விளைவால் கி. கிருமொன்றுக்கு ரூ. 56.91 ஆக 18சதவீதத்தால் உயர்ந்தன.

புடவைகளினதும் காலணிகளினதும் விலைகள் 1981இல் 5 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்தன. முக்கியமாக செங்கட்டிகள் உலோகம் மணல் ஆகியவற்றில் குறிப்பிடப்படும் சட்டடப் பொருட்களின் விலைகள் 16 சதவீதத்தால் அதிகரித்தன.

**கூலி**

பொருளாதாரத்தின் நன்கமைந்த துறைகளில் மத்திய அரச ஊழியர்களுக்கும் கூலி நிர்ணசபைக்குட்பட்ட தொழிலாளர் ஆகியோருக்கானி பணக்கூலிகள் ஆகக் குறைந்த கூலிவீத சுட்டெண்ணினுல் அளவிடப்படுகின்றன.

கூலி நிர்ணயசபைக்குட்பட்ட அரச ஊழியர்களினதும் தனியார்துறை ஊழியர்களினதும் பணக்கூலியும் உண்மைக்கூலியும் 1982இல் அதிகரித்தன. எனினும் அரச ஊழியர்கள் திரட்டிய சம்பளத்தால் நன்மையடைந்தமையால் அரசதுறையிலுள்ள அதிகரிப்பு தனியார்துறையிலுள்ளதிலும் பார்க்க உயர்வாக இருந்தது.

அரச ஊழியர்களின் பணக்கூலி 1981இன் (15 சதவீதம்) விட 1982இல் உயர்ந்த வீதத்தில் (32 சதவீதம்) அதிகரித்தது. தொழில்நுட்ப ஊழியர்கள் எழுதுவினைஞர்கள் ஆகியோருக்கான பணக்கூலி வீதச்சுட்டெண் 1981இன் 13 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1982இல் 31 சதவீதத்தால் அதிகரித்தது. சிற்றூழியர்கள் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரைப் பொறுத்தளவில் 1982இல் பணக்கூலியில் அதிகரிப்புக்கள் முறையே 32 சதவீதமாகவும் 27 சதவீதமாகவும் இருந்தன. 1981இல் இது தொடர்பான அதிகரிப்புக்கள் முறையே 16 சதவீதமாயும் 12 சதவீதமாயும் மிகவும் குறைந்தளவாக விளங்கின.

1981இல் அரசதுறை ஊழியர்களின் உண்மைக்கூலியில் 3 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1982இல் அரசதுறை ஊழியர்களின் உண்மைக்கூலி 19 சதவீதத்தால் கணிசமானளவுக்கு அதிகரித்தது. தொழில்நுட்ப ஊழியர்கள் எழுதுவினைஞர் ஆகியோரின் உண்மைக்கூலி 1981இன் 5 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1982இல் 18 சதவீத்தால் அதிகரித்தது. சிற்றூழியர்களின் உண்மைக்கூலி 1981இன் 2 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 19சதவீதத்தால் அதிகரித்தவேளையில் பாடசாலை ஆசிரியர்களுக்கானது 1981 இன் 6சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் அதிகரித்தது.

1982இன் பண, உண்மைக் கூலிகளிலான அதிகரிப்புக்கள் கடந்த 5 ஆண்டுகளில் பதிவு, செய்யப்பட்டவற்றில் அதிகூடியதாகும். வாழ்க்கைச் செலவுச்சுட்டெண்ணுடன் தொடர்புபடுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு தொடர்ந்து கிடைத்துவருவதோடு 1982 சனவரியில் சம்பளம் திருத்தியமைக்கப்பட்டது இவ்வதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். இவ்வாறு கூலிகள் வாழ்க்கைச்செலவுச்சுட்டெண்ணுடன் தொடர்புபடுத்தப்பட்டமையால் பெயரளவிலான கூலி அதிகரிப்புக்கள் உண்மைக்கூலிகளில் அதிகரிப்புக்களை விளைவித்தன.

நன்கமைந்த தனியார்துறையில் தேயிலை, இறப்பர், தெங்குத்துறைகளிலுள்ள தொழிலாளர்களின் அதிகுறைந்த கூலி 1981 இன் 0.2 சதவீத சிறிதளவிலான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1982 இல் 13 சதவீதத்தால் அதிகரித்தது. கைத்தொழில் வர்த்தகத்துறை தொழிலாளர்களின் அதிகுறைந்த கூலி 1981 இன் 13சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 12 சதவீதத்தால் அதிகரித்தது. நன்கமைந்த வேளாண்மை, கைத்தொழில்வர்த்தகத்துறைகளுக்கான ஒன்றிணைந்த அதிகுறைந்த கூலிவீதச்சுட்டெண் 1981 இன் 1சதவீத சிறிதளவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தால் அதிகரித்தது.

## கூலிவீதச் சுட்டெண்கள்

*1952 = 100*

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.32

### நன்கமையாத துறையின் சராசரி நாளாந்த கூலி வீதங்கள்

| நன்கமையாத துறை | தொழிலாளர் வகை | 1981 ரூபா | 1982 ரூபா | ரூபா மாற்றம் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| நெல் ... | ஆண் | 27.78 | 30.66 | 2.88 | 10 |
| | பெண் | 19.82 | 22.26 | 2.44 | 12 |
| தெங்கு ... | ஆண் | 27.01 | 32.39 | 5.38 | 20 |
| | பெண் | 16.07 | 18.26 | 2.19 | 14 |
| இறப்பர் ... | ஆண் | 25.39 | 26.22 | 0.88 | 3 |
| | பெண் | 18.20 | 18.88 | 0.68 | 4 |
| தேயிலை ... | ஆண் | 20.50 | 22.17 | 1.67 | 9 |
| | பெண் | 15.17 | 15.86 | 0.69 | 5 |
| தச்சு வேலை ... | ஆண் | 46.85 | 53.86 | 7.01 | 15 |
| கொத்து வேலை ... | ஆண் | 45.90 | 52.44 | 6.54 | 14 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

1981 இல் 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளாண்மைத்துறைத் தொழிலாளர்களின் உண்மைக்கூலி 1982 இன் 2சதவீத அதிகரிப்பைக்காட்டியது. கைத்தொழில் வர்த்தகத்துறை தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் உண்மைக்கூலி வீதம் 1981 இல் பதிவு செய்யப்பட்ட 5 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1.5 சதவீதத்தால் அதிகரித்தது.

மத்தியவங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறையின்கீழ் சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி நன்கமையாத துறையின் கூலிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கள் காணப்படுகின்றன. நன்கமையாத துறையின் 1981,1982க்கான சராசரி நாளாந்த கூலி வீதங்கள் அட்டவணை 1.32இல் கொடுக்கப்பட்டுள்ளன.

தேயிலை, இறப்பர், தெங்கு, நெற்செய்கை, கட்டடவாக்கம் போன்ற நன்கமையாத துறையில் எல்லா வகைகளினதும் ஆண் பெண் தொழிலாளர்களின் நாடளாவிய நாள் கூலி வீதங்கள் 1982 இல் அதிகரித்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நெற் செய்கையில் ஆண் தொழிலாளர்களின் சராசரி நாள்கூலி 1982 இல் 10 சதவீத அதிகரிப்பொன்றைக்காட்டியவேளையில் பெண் தொழிலாளி ஒருவரின் கூலி வீதம் 12சதவீதத்தால் அதிகரித்தது. இது 1979 இலிருந்து நெற்செய்கையில் அவதானிக்கப்பட்ட கூலி வீதங்களின் அதிகரிக்கும்போக்கின் தொடர்ச்சியையே எடுத்துக்காட்டுகின்றது. தேயிலை, இறப்பர், தெங்குச்செய்கைத் துறையிலுள்ள ஆண் தொழிலாளர்களுக்கான நாள் கூலிவீதமும் அதிகரித்தது. தெங்குப் பயிர்ச் செய்கையிலுள்ள தொழிலாளர்களுக்கான அதிகரிப்பு அதிகூடியதாக இருந்தமையால் இறப்பர் துறைக்கானது அதிகுறைந்த அதிகரிப்பைக் காட்டியது. தலைமைத் தச்சுத்தொழிலாளர், கொத்தனர் ஆகியோருக்கான நாடளாவிய நாளாந்த சராசரி கூலிவீதங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 1982இல் முறையே 15சதவீத 14சதவீத அதிகரிப்புக்களைக் காட்டின.